# உதவி ஆய்வாளர் தேர்வுக்கு தயாராகும் காவலர்களுக்கு சிறப்பு பயிற்சி

## ● வேலூர் சரக டிஐஜி ஆனி விஜயா தொடங்கி வைத்தார்

■ வேலூர்

வேலூரில் உதவி ஆய்வாளர் பணிக்கான தேர்வுக்கு விண்ணப்பித்த காவலர்களுக்கான சிறப்பு பயிற்சி வகுப்பை வேலூர் சரக டிஐஜி ஆனி விஜயா தொடங்கி வைத்தார்.

வேலூரில் உதவி காவல் ஆய்வாளர் எழுத்துத் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள வேலூர் சரகத்தில் உள்ள காவலர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம் நேற்று தொடங்கி வைக்கப்பட்டது.

வேலூர் கோட்டை சுற்றுச் சாலையில் உள்ள காவலர் நல்வாழ்வு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயிற்சி வகுப்பை வேலூர் சரக டிஐஜி ஆனி விஜயா தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ் கண்ணன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழகம் முழுவதும் காலியாக உள்ள 1,444 உதவி காவல் ஆய்வாளர் பணியிடங்களுக்கான எழுத்துத்தேர்வு வரும் ஜூன் 25-ம் தேதி நடைபெறவுள்ளது.



▲ உதவி ஆய்வாளர் பணிக்கு விண்ணப்பித்துள்ள காவலர்களுக்கான சிறப்பு பயிற்சி வகுப்பை தொடங்கி வ... பேசும் வேலூர் சரக டிஐஜி ஆனி விஜயா. அருகில், வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ் கண்... கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர்.

இதில், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டங்களில் இருந்து உதவி ஆய்வாளர் பணிக்கான எழுத்து தேர்வுக்கு தயாராகும் காவலர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இந்த முகாமில் தேர்வை எதிர் கொள்வது, எழுத்துத்தேர்வு நுணுக்கங்கள் குறித்து டிஐஜி ஆனி விஜயா விளக்கினார். இந்த முகாமில் 300-க்கும் மேற்பட்ட காவலர்கள் பங்கேற்றுள்ளனர்.

இது தொடர்பாக வேலூர் சரக டிஐஜி ஆனி விஜயா, செய்தியாளர்களிடம் கூறும்போது, "உதவி காவல் ஆய்வாளர் தேர்வுக்காக வேலூர் சரகத்தில் 1,200-க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர். இதில், துறை ரீதியாக இட ஒதுக்கீட்டில் விண்ணப்பித்துள்ள காவலர்களுக்கு தேர்வை எதிர்கொள்வது... பயிற்சி அளிக்கப்படுகிற...

இந்த தேர்வை ... காவலர்கள் உதவி ... பதவிக்கு வந்தால் ... நல்ல முறையில் ... செய்வார்கள். எனவே ... நன்கு பயிற்சி பெ... தேர்வில் வெற்றி பெற... என்பது எனது ... என்றார்.